**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

குத்தகை - நகராட்சிக்குச் சொந்தமான குளங்களில் மீன்பிடிக்கும் உரிமை - ஆண்டு குத்தகைக்கு பொது ஏலத்தில் விடுவது - ஆணை வெளியிடப்படுகிறது

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4)துறை**

அரசாணை (நிலை) எண் 117 நாள் 9.5.97
படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண் 1917. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ாட்சிதுறை

நாள் 14.9.72

2. அரசாணை (நிலை) எண் 413. ஊரக வளர்சசி மற்றும் உள்ளாட்சி துறை

நாள் 23.3.82

3. காமராஜர் மாவட்ட ஆட்சித்தலைவரின் கடித எண் 337/85 நாள் 17.5.85

4. அரசாணை (நிலை) எண் 367, ஊரக வளர்ச்சித் துறை நாள் 3.5.96

5. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடித எண் 68922/95/ஆர்3 நாள் 13.9.96

ஆணை

அரசாணை (நிலை) எண் 1917 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள் 14.9.72ல் நகராட்சிகளுக்குச் சொந்தமான நீர் ஆதாரங்களில். பாசன ஆதாரங்கள் தவிர்த்து. மீன் பிடிக்கும் உரிமையை பதிவு செய்யப்பட்ட மீனவர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு. பொது ஏலம் தவிர்த்து மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடவும், எந்த ஒரு கூட்டுறவு சங்கமும்

குத்தகைக்கு எடுக்க முன்வர வில்லை என்றால் பொது ஏலத்தில் விடவும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் கண்டுள்ள அரசு ஆணையில், நகராட்சிகள் மற்றும் நகராட்சி நகரியங்களில் எங்கெல்லாம் மீனவ கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் நகராட்சி குளங்களில் மீன் பிடிக்கும் உரிமையை முன்னுரிமை அடிப்படையில் மேற்படி சங்கத்திற்கு வழங்கலாம் என்றும், எங்கெல்லாம் மீனவ கூட்டுறவு சங்கங்கள் இல்லையோ அங்கெல்லாம் மாவட்ட மீன் பிடிப்போர் வளர்ச்சி நிறுவனத்திடம் மீன்பிடிக்கும் உரிமையை குத்தகைக்கு விடலாம் என்றும் மீனவர் கூட்டுறவு சங்கம் மற்றும் மீன்பிடிப்போர் வளர்ச்சி நிறுவனம் இவை இரண்டுமே இல்லாத நிலையில் நகராட்சி குளங்களில் மீன் பிடிக்கும் உரிமையை பொது ஏலத்தில் விடலாம் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

3, காமராஜர் மாவட்ட ஆட்சித்தலைவர் நகராட்சி குளங்களை மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு குத்தகைக்கு விடும்பொழுது குத்தகைத் தொகை நிர்ணயம் செய்வது பற்றி எந்த ஒரு குறிப்பான அறிவுரைகளும் அரசாணை (நிலை) எண் 413, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள் 23.3.82ல் இல்லை என்றும் எனவே குத்தகைத் தொகையை நிர்ணயம் செய்வது குறித்து பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் பற்றியும் எவ்வளவு காலத்திற்கு இந்த குத்தகை புதுப்பிக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் தெளிவுரை வேண்டியுள்ளார்.

4, பார்வை 4ல் கண்டுள்ள அரசாணையில் ஊராட்சி மற்றும் ஊராட்சி மன்றங்களில் உள்ள குளங்களில் மீன் பிடிக்கும் உரிமையை சம்பந்தப்பட்ட ஊராட்சி அல்லது ஊராட்சி மன்றங்கள் பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடலாம் என்றும் இந்த குத்தகை ஓராண்டுக்கு மேற்படாது இருக்க வேண்டும் என்றும் ஊராட்சி மீனவ கூட்டுறவு சங்கம் மற்றும் கடல்வாழ் மீனவ கூட்டுறவு சங்கம் ஆகியோர் இந்த பொது ஏலத்தில் பங்கு கொள்ளலாம் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது

5. நகராட்சி நிர்வாக இயக்குநர். நகராட்சிக்குச் சொந்தமான குளங்களில் மீன் பிடிக்கும் உரிமையை ஒவ்வொரு ஆண்டும் பொது ஏலத்தில் குத்தகைக்கு விட்டால் நகராட்சிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் என்றும் எனவே அரசாணை (நிலை) எண் 367, ஊரக வளர்ச்சித்துறை நாள் 3.5.90 போல் நகராட்சிகளுக்கும் ஆணை வெளியிடுமாறு கேட்டுள்ளார்.

6. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்தை அரசு கவனமுடன் பரிசீலித்தது. அரசாணை (நிலை) எண் 367, ஊரக வளர்ச்சித் துறை நாள் 3.5.90ல் வெளியிட்டுள்ளது போல நகராட்சிக்குச் சொந்தமான குளங்களில் மீன் பிடிக்கும் உரிமையை ஒவ்வொரு ஆண்டும் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடவும், அந்த ஏலத்தில் மீனவ கூட்டுறவு சங்கங்கள் மற்றும் மாவட்ட மீன்பிடிப்போர் வளர்ச்சி நிறுவனங்கள் கலந்து கொள்ள அனுமதித்தும் அரசு ஆணையிடுகிறது

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி.

அரசு செயலாளர்

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 5
அனைத்து நகராட்சி ஆணையர்கள் (நகர்மன்றத் தலைவர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள் (சென்னை நீங்கலாக)
இயக்குநர். உள்ளாட்சி நிதிக் கணக்குகள். சென்னை 108
இயக்குநர். மீன்வளத்துறை சென்னை 6
நகல் மீன்வளத்துறை நிதித்துறை சென்னை 9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்